**ஐ.டி.எண்.33/2024**
20.02.2026

**தொ.த.சாட்சி 1 திரு. நவீன்குமார் குறுக்கு விசாரணை**

நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் அனைத்தையும் நான் கூறி எனது வழக்கறிஞர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் வேலை கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். நான் கடைசியாக ரூபாய் 13,000/- மாத சம்பளமாக பெற்றேன். எதற்காக என்னை பணிநீக்கம் செய்தார்கள் என்று கம்பெனியினர் எனக்கு தெரிவித்தனர். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்க்கும் பெண் பணியாளரிடம் நான் தவறாக நடந்ததாக கூறி என்னை பணிநீக்கம் செய்தனர். இதுகுறித்து பாதிக்கப்பட்ட விஷ்ணுபிரியா என்பவர் 20.04.2023 அன்று கம்பெனியின் எச்.ஆர்-ரிடம் புகார் அளித்தது குறித்து என்னிடம் கம்பெனியினர் தெரிவித்தனர் என்றால் சரிதான். அதற்கு நான் என்னுடைய விளக்கத்தை சமர்பித்தேன் என்றால் சரிதான். கம்பெனியில் இதுகுறித்து உள்விசாரணை குழு ஒன்று அமைக்கப்பட்டது என்றால் சரிதான். நிர்வாகத்தரப்பினர் 4 நபர்கள் கொண்ட குழுவை நியமித்தனர். அந்த விசாரணை எந்த தேதியில் ஆரம்பிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த விசாரணைக்குழுவின் முன்னிலையில் நான் ஆஜரானனேன். எனது தரப்பில் நான் சாட்சிகள் யாரையும் விசாரணை குழுவின் முன்பு ஆஜர்படுத்தவில்லை ஆனால் விசாரணை குழுவினர் என்னுடன் பணிபுரிந்த சகப்பணியாளர்களை விசாரித்தனர். நான் பாதிக்கப்பட்ட விஷ்ணுபிரியா என்பவரிடம் தவறாக நடக்க முயற்சித்ததை உடன் பணி செய்யும் நளினி என்பவர் பார்த்தார் என்றும் அவர் அறிவுறுத்தலின் அடிப்படையில் தான் விஷ்ணுபிரியா இது குறித்து நிர்வாகத்திடம் புகார் அளித்தார் என்றால் நான் எந்த தவறிலும் ஈடுபடவில்லை. விசாரணை குழுவின் முன்பு நான் பாதிக்கப்பட்ட விஷ்ணுபிரியாவை குறுக்கு விசாரணை எதுவும் செய்யவில்லை. நான் கூறுவது தவறு என்றும் விஷ்ணுபிரியாவை நான் குறுக்கு விசாரணை செய்தேன் என்றால் சரியல்ல. நான் குறுக்கு விசாரணை செய்தபோது

விஷ்ணுபிரியா எனக்கு எதிராக நடந்த சம்பவம் குறித்து கூறியதின் அடிப்படையில் தான் நிர்வாகத்தினர் என்னை பணிநீக்கம் செய்தனர் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.02.20 17:16:52 +0530